வேண்டுமென்பதற்காக கடந்த எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு, போற்றுதலுக்குரிய நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் மீனவர்களுக்கு அடையாள அட்டையை அரசாங்கச் செலவினிலே வழங்கியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே, இதுபோன்று மீனவர்கள் அடையாள அட்டையை முழுவதுமாக வாங்கி விட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

69—

ஆலம்பாடியில் கண்ணாடி தொழிற்சாலை அமைத்தல்

*33527–**செல்வி கோ. மல்லிகா:***

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) புவனகிரி ஒன்றியம், ஆலம்பாடி கிராமத்தில் கண்ணாடி தொழிற்சாலை ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): புவனகிரி ஒன்றியம், ஆலம்பாடி கிராமத்தில் கண்ணாடி தொழிற்சாலை ஒன்று கட்ட, இத்துறையைப் பொருத்தவரை அரசிடம் செயற்குறிப்போ அல்லது திட்டமோ ஏதுமில்லை. இது சம்பந்தமாக தொழில் முனைவோர் யாராகிலும் முன்வருவார்களேயாயின், இத்துறையிலிருந்து சம்பந்தமான உதவிகள் அனைத்தும் வழங்கப்படும்.

73—

வேதாரண்யம் தொகுதியில் சத்துணவு மையங்கள் அமைத்தல்

*25108—**திரு பி.வி. இராஜேந்திரன்:***

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பு கல்வியாண்டில் வேதாரண்யம் தொகுதியில் புதிதாக துவங்கப்பட்டுள்ள ஆயக்காரன்புலம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும், தேத்தாகுடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் தனித்தனியாக சத்துணவு மையங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

1995 மார்ச் 20]

மாண்புமிகு புலவர் திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவரிட்மிருந்து தகுந்த கருத்துருக்கள் வரப்பெறின் அரசு ஆவன செய்யும்.

79—

திருநெல்வேலி தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

*23307—திரு. **டி. வேலையா:***

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, பாளையங்கோட்டை வட்டம், திம்மராஜபுரம் கிராமம், மஜரா படப்பக்குறிச்சியில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திம்மராஜபுரம் கிராமம், படப்பக்குறிச்சியில் 41 வீடற்ற ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்க அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(ஒன்பதாம் பட்டியல் (*))

1—

வால்பாறை தொகுதியிலுள்ள மலைவாழ் மக்களின் வாக்குச் சாவடிகள்.

வினா எண் 21993—**டாக்டர் அ. ஸ்ரீதரன்:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

***குறிப்பு:** இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.